# நல்லதொரு பயணம்

சிறுவர் கதைகள்



இக்பால் அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதொரு பயணம்

## சிறுவர் கதைகள்

இக்பால் அலி

வெளியீடு :
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
18/13 பூரணவத்த,
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHY

| | |
|---|---|
| Title | : *NALLA THORU PAYANAM (Childrens Stories)* |
| Author | : Iqbal Ali<br>738 /B, Thombuthar Road,<br>Sainthamaruthu -17 |
| First Edition | : September 2002 |
| Copy Right | : The Author |
| Pages | : 24 |
| Cover Design | : M.C. Ashraff |
| Publisher | : People Art and Literature Federation<br>18/3 Poorana Watta<br>Kandy |
| ISBN NO | : 955 -8335 -02-9 |
| Printed by | : Print - Ex Graphics, Kandy |
| Price | : 35/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**சொல்லின் செல்வி ரூபராணி ஜோசப்**
*பன்நூல் ஆசிரியர், பேச்சாளர் பல்துறை நூல்களுக்கு அரச விருதுகள் பெற்றவர்*
*முன்னாள் ஆசிரியை, புனித நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி.*

கதைகள் கேட்பதென்றால் எல்லோருக்கும் விருப்பமான ஒரு விஷயம். அதிலும் சிறுவர்கள் கதை கேட்பதில் சிறப்பான ஒரு இடத்தைப் பெறுகிறார்கள். அன்றிலிருந்து இன்றுவரை மனிதருக்காகவே கதைகள் கூறப்படுவதும் யாவரும் அறிந்த உண்மை. எனினும் சிறுவர்களுக்காக எழுதப்படும் எந்த ஒரு விஷயமும் மிகக் கவனமாகக் கையாளப்பட வேண்டும். சிறுகதை என்பது வாழ்க்கையின் யன்னல். கதைகளின் பக்கங்களை வைத்து அதை எடை போட முடியாது. ஒரு கதைக்கு நீளம் முக்கியமல்ல. அதன் ஆழம் அவசியம் பேணப்படவேண்டிய ஒரு அம்சமாகும். கதையின் கரு படிப்போர் நெஞ்சில் கொஞ்ச நேரமாவது சஞ்சரிக்கும் வகையில் நகர்த்திச் செல்லப்பட வேண்டும். படித்து முடிக்கும்போது அலுத்துப் போகாமல் ஆழமாகச் சிந்திக்க வைத்துவிடுவதே ஒரு எழுத்தாளனின் முக்கிய நோக்காக இருக்க வேண்டும் என்பதே என் கருத்தாகும்.

இந்த வகையில் சிறுவர்களுக்காக நல்லதொரு பயணம் என்னும் நூலை எழுதியுள்ளார் நாடறிந்த கவிஞர் இக்பால் அலி அவர்கள். இந்நூற் தொகுதியில் ஐந்து கதைகள் உள்ளன. இக்கதைகள் ஒவ்வொன்றும் நடைமுறைக்கேற்ற யதார்த்தவியற் கருத்துக்களையே சொல்லுகின்றன. இவருடைய "விடுதியில் அகதி மாணவர்கள்" என்ற கதையில் சமாதானத்தின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. யுத்தத்தினால் தொடரும் அகதிவாழ்வின் அவலம் சிறுவர்களை சிந்திக்க வைக்கக் கூடியவை. ஒற்றுமையாக வாழ்வதில் உள்ள சந்தோசங்கள் எடுத்துக்காட்டப்படுகிறது.

"நல்ல மனிதர்கள்" என்னும் கதை நல்லதோர் படிப்பினையைத் தருகிறது. எல்லா இனங்களிலும் நல்ல குணங்களும் உண்டு என்ற உண்மை உணர்த்தப்படுகிறது. பிரதிபலன்பாராது சிங்களக்குடும்பம் ஒன்று செய்யும் உதவி சிறுவர்கள் மனதில் இனங்களிலான உறவை-அன்பை-நேசத்தையெல்லாம் நன்கு பதிவு செய்கின்ற ஒரு நல்ல கதையாகும்.

இந்நூலில் வரும் அனைத்துக் கதைகளும் சிறவர்களுக்கு அவசியம் என்பதோடு அவர்கள் வாசிக்கின்ற போது புத்துணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியவை. உழைப்பாளி கியான், தெரு விளையாட்டால் படித்த பாடம், வயலில் புல் பிடுங்கும் பெண்டுகள் ஆகிய ஒவ்வொரு கதைகளிலும் சிறுவர்களுக்கான அறிவாகவும், ஆலோசனையாகவும், வழிகாட்டலாகவும் உள்ளன. ஆக மொத்தத்தில் இந்நூல் சிறுவர் இலக்கிய உலகுக்குத் தேவை எனச் சாட்சியம் கூறுகிறது. தம்பி இக்பால் அலியின் பணி தொடர என் நல்லாசிகள் உரித்தாகுக.

*-ரூபராணி ஜோசப்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

இன்று சிறுவர்கள் கதைபற்றி கூறுகின்றபோது முன்னொரு காலத்தினுடைய சம்பங்களைக் குறிக்கக் கூடிய கதைப் பாத்திரங்களைக் கொண்ட கதைகளையே நாம் அதிகம் கேட்டறிந்து வருகின்றோம். இன்றைய காலத்திலிருந்து நாளைய காலத்தின் இருப்பை உருவாக்கவோ அல்லது நாளைய காலத்திலிருந்து தற்கால இருப்பை அறிந்து கொள்ளவோ சிறார்களின் இலக்கியப் போக்குகள் நிர்ணயிக்கக் கூடியதாக வளரவில்லை.

மாறாக, சிறார்களின் உளவியல் எண்ணக்கரு வளர்ச்சியில் சில தாக்கங்களைக் கொண்டுள்ளது. சிறுவர் பருவத்தின் புலன் வளர்ச்சி, விவேக வளர்ச்சி, சமூக வளர்ச்சி போன்ற உளவியல் கோட்பாட்டிற்கே உரிய தனித்தன்மை துரித வளர்ச்சினைக் கொண்டிருந்த போதிலும் கூட இனவாதமும், போர்ச்சூழலியலும் இங்கு புது வடிவம் பெற்று பெரும் தாக்கம் செலுத்துவதை முக்கியமாகக் கொள்ள வேண்டும். இந்த வலைப்பின்னலின் காரணமாக ஒரு தனித்துவ அடையாளங்களற்று நாளை என்ற ஒரு குறித்த இருப்பிலிருந்து கொண்டு தற்கால இருப்பைக் குறித்துச் சொல்வதற்கு சிறார்கள் இனவாதத்தால், போரால் தனக்கென உருவாக்கிக் கொண்ட தனித்துவ உளவியல் கோட்பாட்டை இழந்து உயிர் வாழ்வது நிச்சயமா? என்ற கேள்வி அலை எழுகின்றது. இருப்பியல்வாதிகளின் கோசமும் இதுவே.

இத்தருணத்தில் மிக நீண்ட காலமாக இருந்து வருகின்ற மரபில் உருவான கதைகள் சிறார்களின் மனோபாவத்துக்குப் பொருத்தமல்ல என்பதைவிட அவ்வப் போது தேவையான வடிவங்களில் எழுகின்ற கதை உருவாக்கங்கள் தோன்றி சிறார்களின் மனோபாவத்தோடு வேறொரு தாக்கம் ஈடுபட அனுமதியாமல் அதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க வேண்டும். அவை குறிப்பாக கண்முன் தெரியும் சிறார்களின் அழிவை தடுத்து நிறுத்தக் கூடிய வழிவகையிலான தீவிர சிந்தனைக் கூறுகளை சிறுவர் இலக்கியத்திற்கு ஒவ்வாதது என்று ஒதுக்கி வைத்து விட்டு சிறுவர்கள் இருப்பைக் காப்பற்ற முனைவது ஒரு அர்த்தமற்ற விடயம். பின் நவீனத்துவாதிகளும் (POST MODERNISM) இதைப் பேசுகின்றனர்.

ஏனென்றால் இனவெறியும், யுத்தக் கொடுமையும் ஒரு தீராத பிணைந்தகலவை. இவை சிறுவர்கள் மனதை அதிரடி வேகத்தில் பாதித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எமது மண்ணிலும் கூட இப்பிரச்சினைகளுக்கு மருந்தே இன்றி உயிர்மாய்த்துக் கொண்டிருக்கின்றனர். இங்கு சமாதானம் கிட்டாதவரை உயிர் அழிவுகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும். அதனால் இச் சிறுவர்களைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளின் ஒளித்தெறிப்புக்களையே என்னால் தர முடிகிறது.

சிறுவர்கள் கதை எழுதுமாறு என்னை அடிக்கடி தூண்டி ஒத்துழைப்பு நல்கிய கணக்காளர் ஏ.ஜே.எம். முபாறக் அவர்களுக்கும், இந்நூல் வெளிவருதற்கு ஒத்துழைப்பினைப் புரிந்த எம்.எம்.எம். றிழ்வான் அவர்கள் உட்பட மற்றும் சக நண்பர்களுக்கும் நன்றிகள்.

*-இக்பால் அலி-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை


சிறார்களின் உள எண்ணக்கரு வளர்ச்சியில் ஒழுக்கம், அறம்,அன்பு பண்பாட்டியலின் பல்வேறு வகையிலான தனித்துவத்தன்மையைப் பெறாமல் வன்முறையும், அட்டகாசமும் இங்கு புதுவடிங்கள் பெற்று தலை தூக்கி நிற்பதைப் பற்றிச் சிந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் உள்ளப்பாங்கு குறைந்து வருகிறது. இத்தகைய சூழலால் நாளை நல்லதொரு சிறுவர் சமூகத்தை உருவாக்கும் நிலைப்பாடு இங்கு இல்லாமற் போகிடுமோ என்ற அச்ச நிலை வெளிப்படுகிறது.

தற்கால சிறார்களின் இருப்பைக் கருத்திற்கொண்டு "நல்லதொரு பயணம்" என்னும் சிறுவர் கதை நூலை கவிஞர் இக்பால் அலி எழுதியுள்ளார். உழைப்பாளி கியான் என்ற கதையில் உளவியல் பகுப்பாய்வு நடைபெறுகிறது. கியான் என்பவனின் எண்ண ஓட்டங்களில் ஒவ்வொரு நேரத்திலும் உளப்பாதிப்பே தானே எழுந்து அமிழுகிற சம்பவத்தை மிக அருமையாகச் சித்தரித்துள்ளார். இது தற்கால சமாதான விரும்பிகளுக்கும் சிறார்களுக்கும் ஏற்றகதையாகும்.

இந்நூலில் வரும் ஐந்து கதைளையும் படிக்கின்றபோது சிறார்களுக்குரிய கலை, நுண்ணிய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய கதைகள் உள்ளன. அதுவே இக்கதைகளை திரும்பவும் படிக்கவும் தூண்டுகிறது. இந்நூலை வெளியிடுவதில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்திற்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றிப்படியாகும். இவர் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

இரா. அ. இராமன்
தலைவர்,
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுதியில் அகதி மாணவர்கள்

கல்லூரி விடுதியொன்றில் இரு அகதி மாணவர்கள் தங்கி இருந்து கல்வி கற்றனர். ஒருவன் சஜீத். மற்றவன் ராபி. பாடங்களில் கூடிய கவனம் செலுத்துவதிலே ஒருவரை ஒருவர் விஞ்சி நிற்பார்கள்.

விடுதிமாணவன் சஜீத் தான் அகதி என்ற தாழ்வு மனப்பான்மை இல்லாமல் எல்லோரையும் போல பழகுவான். உடைகளை அழகாய் உடுப்பான். எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பான்.

விடுதிமாணவன் ராபி முகத்தைத் தொங்கப் போட்டவாறும், தனிமையாகவும் இருப்பான். வீட்டுக் கவலைகள் ஏற்பட்டு விட்டால் அவன் யாரோடும் கதைக்கவும் மாட்டான். படிக்கவும் மாட்டான். தான் அகதி மாணவன் என்ற தாழ்வு மனப்பான்மை அவனிடம் காணப்படும்.

சந்தோசமுடைய சஜீத் ஒரு நாள் தனது தந்தை சுகயீனம் உற்ற செய்தி அறிந்து தம் விடுதிப்பிரிவு மாணவர்கள் சகிதம் ஒரு சிறு வேனில் தமது முகாமிற்குப் புறப்பட்டான். மூன்று மணித்தியாலங்களிலே அவன் வசிக்கின்ற முகாமை அந்த சிறிய வாகனம் சென்று அடைந்தது.

ஒரு பெரிய பரந்த வெளியில் சிறு சிறு ஒரே அணியாக தோற்றம் தரும் அகதி முகாம் வாழ்க்கைச் சூழலை புதிதாகப் பார்த்தபடி வாகனத்தில் வந்த விடுதி மாணவர்கள் ரசித்து நின்றார்கள். இந்தக் காட்சி சஜீதுக்கு நன்கு பழக்கப்பட்டவை. அப்போது சஜீதின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் அனைவரையும் உள்ளே வரும்படி அழைத்தார்.

"இப்போது இரண்டொரு நாளாகத்தான் வருத்தம்.. வாப்பா.. தம்பியைப் பார்க்காமல் இருக்க மாட்டார்.. வந்திருங்கள்.. ஆனால் கதிரைகளும் இல்லை. இடமும் போதாது.. அகதி முகாம் என்றால் தெரியும் தானே....! பாயில் உள்ளேயும் வெட்டவெளியேயும் இருங்கள்... பிள்ளைகளே! இவை உங்களுக்குப் புதிதாக இருக்கலாம்.. எப்படியும் சமாளித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினாள். அகதி மாணவன் சஜீதின் தாய்.

விடுதி மாணவன் சஜீத் மனக்கவலையுடன் வாப்பாவின் அருகில் சென்று தலையைத் தடவினான்.

சஜீதின் வாப்பாவோ கட்டிலில் படுத்திருந்தார். நோயுற்ற நிலையோடு தம் மகன் உட்பட சக மாணவர்களையும் அவர் கண்டு அகமகிழ்ந்தார். தன் நண்பர்கள் தங்களையும் தம் முகாம் பகுதியையும் பார்ப்பதற்கு வந்திருப்பதாக வாப்பாவிடம் தெரிவித்தான் சஜீத்.

"படிக்கிற பிள்ளைகள் நீங்கள்! விடுதியில் நாட்டில் உள்ள ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்தவர்களும் இருப்பீர்கள். சிலருக்கு அகதி முகாம் என்றாலே தெரியாது. ஓலைக் குடிசை, மழைபெய்தால் ஒழுகும், ஒழுங்காகப் படுக்கவோ, இருக்கவோ முடியாது. தண்ணீர்த் தட்டுப்பாடு. இங்கு சுகாதாரம் இல்லை. அரசாங்கம் உலர் உணவு வழங்குவதினாலேயே ஓரளவு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ரொம்ப கஷ்டம். காரணம். இதற்கெல்லாம் நமது நாட்டினுடைய போர்தான் காரணம். போர் ஓய்ந்து நிம்மதி ஏற்படாதென எதிர்பார்த்தே வாழ்கிறோம். ஆனால் பிள்ளைகளே! இனவாதிகள் உள்ள வரை இந்த நாடு உருப்படப் போவதில்லை" என்று வருத்தத் தோடு கூறினார் சஜீதின் வாப்பா.

"வாப்பா! மனிதர்கள் மனிதர்களை நேசித்தால் கொடிய போரை தொலைத்து விடலாமே. இந்த நாட்டில் மனிதர்கள் மனிதர்களாய் இல்லையா?" என்று கேட்டான் விடுதி மாணவன் ஒருவன்.

"மனிதர்களா.? நம் நாட்டில் எங்கே வாழுகின்றார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் வாழுகின்றார்கள் என்றால் இங்கே நாங்கள் இருக்க மாட்டோம். நாங்கள் நிரந்தரமாக பிறந்து வளர்ந்த இடத்திலேயே இன்னும் நாங்கள் வாழ்ந்து கொண்டிருப்போம். மனிதன் என்ற பெயரில் மிருகங்கள் தான் வாழுகின்றன" என்று சினத்தோடு கூறினார் சஜீதின் தந்தை.

"தந்தையே! மனிதன் என்பவன் அன்பு, பண்பு, கருணை, நேசமிக்க ஆறறிவுபடைத்த உயர்ந்த இனமல்லவா? மனிதர்களும் மிருகமாய் மாறி மனிதனை மனிதன் ஏன் தின்னுகிறார்கள். மனிதனின் பிரதான உணவு மனிதன் என்றெல்லாம் மனிதனை பார்த்து மனிதர்களே கேவலமாகக் கதைக்கிறார்கள். இப்போது நீங்களும் கதைக்கிறீர்கள். இவைகளுக்குப் பரிகாரம் காணாமல் சும்மா கதைத்துக் கொண்டிருந்தால் ஆனபயன் ஒன்றுமில்லையே! மனித இனம் அழிந்து போவதற்கு முன் நாங்கள் நன்மை செய்திட ஏதாவது உண்டா?" என்று கேட்டான் விடுதி மாணவன் இன்னுமொருவன்.

"அடடா ! நீங்கள் நன்மை செய்வதைவிட ஒருவன் இன்னொருவனுக்கு தீங்கு இழைக்காமல் இருந்தாற் போதும்" என்று கூறினார் சஜீதின் தந்தை.

அப்பொழுது தேனீர் உட்பட வாழைப்பழம், வடை, பெட்டிஸ் ஆகிய உணவுவகைகளைக் கொண்ட தட்டத்தினை எடுத்து வந்து சக நண்பர்களிடம் நீட்டினான் விடுதி மாணவன் சஜீத்.

தம் மகனின் நண்பர்கள் உண்ணும் போதும், பேசும் போதும், பழகும் போதும் ஒற்றுமையான நற்பண்புகளைக் கண்ட சஜீதின் தந்தை தம் நோயை மறந்து தானும் அவ்வுணவுகளை உண்டு சுவைத்தார். குடிசைக்குள் வேறு உடை மாற்ற வழியில்லாமல் அடுப்படியே நின்றிருந்த சஜீதின் தாயாரும் வேலைகளுடன் வேலையாய் தம் மகனின் நண்பர்களுடன் இடைக்கிடையே கதைத்துக் கொண்டிருந்தாள்.

தம்மைப் பார்க்க வந்த விடுதி மாணவர்களுக்கு சஜீதின் தந்தை தாம் அகதி நிலைக்குள்ளான காரணத்துக்குரிய உள்ளக்கிடக்கைகளை அள்ளிக் கொட்டியதுடன் எதிர் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சமாதானத்திற்கான நற்பணிகள் ஆற்ற வேண்டும் என்ற ஆலோசனையையும் வழங்கினார்.

விடுதிப் பொறுப்பாசிரியரின் கட்டளைக்கு அமைவாக குறிப்பிட்ட நேரத்திற்குள் விடுதிக்கு சமுகமளிக்க வேண்டிய கடப்பாடு சஜீதின் குழுவினருக்கு பணிக்கப்பட்டிருந்தது. அவ்வகையில் சஜீதின் தந்தை தாயுடன் விடைபெற்றுக் கொண்டு விடுதி திரும்பினர்.

சஜீத் குழுவினர் தான் வசிக்கின்ற அகதிமுகாம் பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள் என்ற செய்தி அறிந்த ராபிக்கு தம்மையும் அழைத்துச் செல்லாதது அவனுடைய மனதிற்கு ஒரு சிறு பாரமாக இருந்தது. இருப்பினும் அவன் மனதை சமாதானப் படுத்திக் கொண்டு அந்தக் குழுவினரைச் சந்தித்தான்.

"ராபி ! நாங்கள் அனைவரும் எங்கள் வீடு போனோம். உன்னையும் கூட்டிச் சென்றிருக்கலாம். ஆனால் நீ எங்கேயுமே போவதில்லை. விடுமுறை வந்தால் மட்டும்தான் வெளியே செல்வாய். ஆனால் நீ அழைத்தாலும் வரமாட்டாய்" என்று கூறி போய் வந்த செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்தான்.

இதைக் கேட்டதும் தாழ்வு மனப்பான்மையுடைய ராபியின் உள்ளம் சந்தோசம் அடைந்தது. அவனுடைய மனதில் கூட்டத்தைக் கூட்டிக் கொண்டு போய் விருந்து உபசாரம் செய்வதிலே அகதி முகாமில் இடமா உள்ளது என்று எண்ணியது.

கூட்டத்தோடு செயற்படுவதைவிட தனித்து தம் காரியங்களை முடிப்பது தம்முடைய பொருளாதார நெருக்கடிக்கு சிறந்த வழி என்று கருதினான்.

விடுதி மாணவர்கள் கிணற்றுக்குக் குளிக்கச்செல்லும்போது தனியேதான் செல்வான். தான் கட்டிக் கொண்டு குளிக்கின்ற சாரனை மற்ற மாணவர்கள் பார்க்கக் கூடாது என்று தன்னை தனிமைப் படுத்திக் கொள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஜீதும் தம்மைப் போன்ற ஒரு அகதி மாணவன். அவனுக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன. அவன் அதைக் காட்டிக் கொள்ளாமல் எல்லோரையும் போன்று நடப்பவற்றை ராபி கண்டு கொள்ளாமலும் இல்லை. தனக்குரிய தாழ்வுச் சிக்கலினால் தனக்கு யாருடைய உதவியும் தேவை இல்லை. தான் நினைத்தபடியே நடப்பேன் என்று தனிமையில் இயங்கிக் கொண்டிருந்தான் ராபி.

மறுநாள் ராபி வழமை போன்று தன்னந்தனியே குளிக்கச் சென்றான்.அப்போது அவன் கால் வழுக்கி கிணற்றுக்குள் விழுந்துவிட்டான். மிக ஆழமான கிணறானாலும் தண்ணீர் மட்டம் அவன் இடுப்புக்கு இருந்தது.

"நண்பர்களே! ஓடி வா! சிறாஜ் ஓடி வா! சுதாகர் ஓடி வா! வசந்த ஓடி வா!" என்று பயந்து கூக்குரலிட்டான் ராபி.

சிராஜ் உட்பட விடுதி பொறுப்பாசிரியர், பெருந்திரளான விடுதி மாணவர்கள் வரை சென்று கயிற்றைக் கொடுத்து ராபியை கிணற்றிலிருந்து மீட்டெடுத்தனர். ராபி நடு நடுங்கியவாறு முகம் மாறின தோற்றத்துடன் வெளியே வந்தான்.

தனிமையை விட சேர்ந்து வாழ்வதுதான் நலம் என்றும் ஆபத்தான நேரங்களில் நண்பர்களின் உதவி முக்கியம் என்பதையும் அவன் அப்போதுதான் புரிந்து கொண்டான்.

**ஒன்று பட்டால் உலகை அறியலாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நமது இலங்கை நாட்டைச் சேர்ந்த ரியாஸ் என்பவன் ஐக்கிய அரபு நாட்டில் மூன்று வருடங்களாக தொழில் புரிந்து வந்தான். அவனுக்கு தஹானி என்ற மனைவி இருந்தாள். அவள் தம் இரு ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையினையும் பராமரித்து வந்தாள்.

அவன் ஒவ்வொரு மாதமும் மனைவி மக்களின் குடும்பச் செலவுகளுக்காக தான் பெறும் சம்பளப் பணத்தை நாட்டுக்கு அனுப்பி வந்தான். அவள் தம் நான்கு பிள்ளைகளுடைய கல்விப் பணிகளுக்காவே அப்பணத்தை கூடுதலாகச் செலவு செய்தாள்.

வெளிநாட்டில் ரியாாஸ் தொழில் புரிந்த போதும் தம் மனைவி மக்கள் நினைவு நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்தன. பிள்ளைகளின் படிப்பு பொருளாதாரம் என்ற காரணத்திலேதான் நான் குடும்பதைப் பிரிந்திருக்கிறேன். இல்லையேல். நானும் பிள்ளை குட்டிகளுடன் தாய் நாட்டில் சந்தோசமாக வாழ்வேனே! தாய் நாட்டில் யுத்தம் முடியும் வரை யாருமே நிம்மதியாக வாழமுடியாது என்று ஒரு மாதிரி மனதை தேற்றிக் கொள்வான்.

ஒரு முறை தொழில் பார்க்கும் இடத்தில் வருட விடுமுறை கிடைத்தது. இலங்கைத் தாய் நாட்டுக்குச் சென்றுவரத் தீர்மானித்தான்.

தனது வருகையை முன் கூட்டியே தொலைபேசியிலும், கடிதத்திலும் மனைவி பிள்ளைகளுக்கு தெரிவித்தும் விட்டான். மட்டற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியுடன் தம் கணவரை அழைத்துவர கட்டுநாயக்கா விமான நிலையம் தமது பிள்ளைகள் சகிதம் வாடகை வேன் ஒன்றில் புறப்பட்டாள் தஹுானி.

விமானம் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்தது. ரியாஸ் சுங்க அதிகாரிகளின் பரிசோதனைகளைத் தாண்டி தம் பெட்டி பொருட்களுடன் பொதிகளை ஏற்றும் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தான். அப்போது அவன் மனைவி மக்கள் அனைவரையும் கண்டதும் கட்டித் தழுவி உச்சந்தலை மோர்ந்து முத்தம் கொடுத்து அகமகிழ்ந்தான்.

வெளியூர் சென்று திரும்பிய ரியாஸ் மனச்சந்தோசத்துடன் வெளிநாட்டு விவகாரங்களை மனைவி பிள்ளைகளிடம் கூறிய அவன் "நான்கு வாரம் விடுமுறையில் வந்திருக்கேன். பொழுதை சந்தோசமாகக் களிப்போம்" என்றதும் அவனின் இளைய மகன் குதூகலத்துடன் அவனைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க மற்றவர்கள் சந்தோசம் அடைந்தனர்.

"பிள்ளைகளின் பள்ளிக் கூடப்படிப்புக்கள் எந்நிலையில் போய்க் கொண்டிருக்கின்றனவாம் என்று பிள்ளைகளைப் பார்த்து கேட்டுவிட்டு உங்களது பாடசாலையின் அபிவிருத்தி நிதிக்காக பணம் கொடுத்து உதவி செய்ய உள்ளேன்"என்ற ரியாஸ்.

"அரசாங்கத்தைப் பொறுத்தவரை நிதி நெருக்கடி மிக்க காலம் இது. பள்ளிக் கூடங்களை முன்னேற்றக் கூடிய சூழ்நிலை இல்லை. நாட்டில் சமாதானத்துக்குரிய அறிகுறிகள் கூட தென்பட வில்லை. பள்ளிக் கூடப்பிள்ளைகளின் ஊடாகத்தான் சமாதானத்தை உருவாக்கலாம். நமது பிள்ளைகள் படிக்கின்ற பள்ளிக் கூடங்களுக்கு நாம் கட்டாயம் உதவ வேண்டும்."

இவ்வாறு தம் கணவன் கூறிய செய்தி கேட்டு மனமகிழ்ச்சி அடைந்தாள் மனைவி தஹுானி. பிள்ளைகள் கூட தாயைப் போல மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

"நானும் பிள்ளைகளை படிப்பிப்பதற்காகத்தான் பாடுபடுகிறேன். நமது இந்தப் பிள்ளைகளின் பள்ளிக் கூடத்திலும் இன, மொழி, சமய வேறுபாடுகளின்றி பலதரத்தாருடைய பிள்ளைகளும் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கின்றனர். நானும் பள்ளிக் கூடத்திற்கு உதவி செய்யுங்கள் என்று சொல்ல எண்ணி இருந்தேன்" என்று கூறினாள் தஹானி.

மனைவியின் நல்லாதரவான பேச்சைக் கேட்டதும் பெரும் சந்தோசம் அடைந்தான் ரியாஸ்.

"நாம் பிள்ளைகளைப் படிப்பித்து வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொள்வதோ நம் நாட்டிலே இயலாத காரியங்கள்... நமது பிள்ளைகளையும் உங்களுடன் வெளிநாடுகளுக்குத்தான் அனுப்ப வரும்... கட்டாயம் ஆங்கிலக் கல்வியையும் தொழில் கல்வியையும் படிக்கச் சொல்லி வருகிறேன். நமது பிள்ளைகள் பரவாயில்லை. ஆனால் நான் ஏனைய பெற்றோரைக் கண்டால் ஆங்கிலக் கல்வி முறையைக் கற்கும்படி வலியுறுத்தி வருகிறேன்...."

இவ்வாறு தனது கணவனிடம் கூறிவிட்டு வந்த வாகனத்தில் ஊருக்குத் திரும்புவதற்குரிய ஆயத்தத்தில் ஈடுபட்டாள் தஹானி.

ரியாஸ், மனைவி, பிள்ளைகள் சகிதம் வெளியூரில் இருந்து எடுத்து வந்த பொதிகளுடன் வாகனம் வீடு நோக்கிப் புறப்பட்டன. வாகனம் புறப்பட்டு ஒன்றறை மணித்தியாலயத்தில் நிட்டம்புவ என்னும் ஊரைத் தாண்டி மரமுந்திரிகைக்குப் பெயர் போன கஜுகம என்னும் கண்டி வீதியில் சென்று கொண்டிருந்தன. ஒரு ஐந்து நிமிடத்தில்.....

"யா.. அல்லாஹ்! யா அல்லாஹ்...!" என்று புரண்டு கிடந்த வாகனத்திற்குள் பயங்கரமாகக் கத்திக் கொண்டிருந்தார்கள் ரியாஸ் குடும்பத்தினர். அந்த இடத்தில் சிங்களச் சகோதரர்கள் ஆண்கள், பெண்கள் இருபாலாரும் ஓடிவந்து சூழ்ந்து விட்டனர்.

"அழ வேண்டாம்! மழைத் தூறலுக்காக டயர் ஸ்கீட்டாகி வாகனம் பிரண்டு உள்ளது. பயப்படாதீர்கள்... ஆட்களுக்கோ ஏதும் இல்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் உங்களை வெளியே எடுத்து விடுவோம்...." என்று ஆறுதல் கூறியபடி வாகனத்தின் கதவை பலமாகத் தட்டி உடைத்துக் கொண்டிருந்தார்கள் சிங்களச் சகோதரர்கள்.

"யா அல்லாஹ்! நாங்கள் என்ன பாவம் செய்தோம்... இப்படி எங்களுக்கு வர வேண்டுமா...? எங்களை அவசரமாக வெளியே எடுங்கள்" என்று கூறியபடி கூக்குரலினை இட்டாள் தஹாணி.

"பயப்படாதீர்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் வேளியே எடுத்து விடுவோம்" என்று கூறிக் கொண்டு அதிதீவிரமாக கதவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைப்பதில் ஈடுபட்டார்கள் சிங்களச் சகோதரர்கள்.

"முதலில் என் பிள்ளையைக் காப்பாற்றுங்கள்!.. என்ற ஏக்கத்துடன் கூறிய தஹ்றானி. என் கணவனின் நெற்றியில் இரத்தம் ஓடுகிறது. தயவு செய்து வாகனத்தின் கண்ணாடியை உடைத்து வெளியெ எடுக்க மாட்டீர்களா? "என்று கெஞ்சிக் கதறினாள் தஹ்றானி.

"பயப்படடாதீர்கள்.... இதோ இன்னும் கொஞ்ச நேரத்தில் எடுத்துவிடுகிறோம். அது சிறிய காயம்தான். நீங்கள் பயப்படுவதற்கு இங்கு ஒன்றும் நடக்க வில்லை" என்றார்கள் சிங்களச் சகோதரர்கள்.

ஒரு மாதரி கதவை உடைத்து முதலில் பிள்ளைகளையும் சாரதியையும் வெளியே எடுத்தனர். அதனைத் தொடர்ந்து கணவன் மனைவி இருவரையும் வெளியே எடுத்தனர்.

அருகே உள்ள சுதந்திகா என்ற சிங்கள சகோதரி ஒருவரின் வீட்டில் வாகனத்தில் வந்த அனைவரையும் தூக்கிக் கொண்டு சேர்த்தனர்.

"பிரண்டு கிடந்த வாகனத்தை நிமிர்த்தி எடுப்பது லேசான காரியமல்ல... இருப்பவர்களைக் கொண்டு ஒரு டம் பிடித்து ஒரே மூச்சாகத் தூக்கி நிமிர்த்திப் போடுவோம்" என்று கதைத்தபடி கூடி நின்ற சிங்களச் சகோதரர்கள் நிமிர்த்தி விட்டார்கள்.

ஊத்தை உடையுடன் முகம் விறைத்துப் போய் நின்ற சாரதி வாகனம் நிமிர்ந்ததைக் கண்டதும் மனம் சந்தோசம் அடைந்தான்.

"ஒரு சொற்ப நேரத்தில் என்ன நடந்தவை என்று எனக்கே தெரியாது. அல்லாஹ் எம்மைப் பாதுகாத்து விட்டான். ஏதோ தலையோடப் போக வேண்டியவை தலைப்பாவோடு முடிந்து விட்டது" என்று தஹ்றானி உதவி நல்கிய சிங்கள வீட்டுச் சகோதரியைப் பார்த்துக் கூறினாள்.

"இதெல்லாம் சகஜம்! இங்கே இருந்து பகல் உணவு சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள்" என்று கூறினாள் சிங்களத் தாய்.

"எங்களால் உங்களுக்கு பெரும் தொல்லைகள். இந்த உதவியை நாங்கள் ஒரு போதும் மறக்க மாட்டோம் " என்று கூறி விட்டு தம் கழுத்தில் கிடந்த இரண்டு பவுண் தங்க மாலையை அந்த சிங்கள வீட்டுக்காரத் தாயிடம் கொடுத்தாள் தஹ்றாணி.

வாங்கிய உடனே அடுத்தகணம் திருப்பிக் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டடாள் வீட்டுக்கார அந்தச் சிங்களத் தாய்.

"இவை எல்லாம் எங்களுக்குப் பெரிதல்ல. மனிதன்தான் பெரிது. மனிதனுக்கு மனிதன் கட்டாயம் உதவி செய்ய வேண்டும். நம் உடம்பில் ஓடுகின்ற இரத்தம் ஒரே நிறம். நாமெல்லாம் ஒன்று. எங்களுக்கு ஒரு ஆபத்து எனும் போது நீங்கள் உதவ வேண்டும். உங்களுக்கு ஒரு ஆபத்து எனும் போது நாங்கள் உதவ வேண்டும். ஆனால் அந்த அன்பளிப்பை நான் பெற்றுக் கொண்டால் அது கூலியாகிவிடும். அது சேவையாகாது. அது மனிதரிக்குரிய பண்பும் அல்ல. அன்பளிப்பைத் திருப்பித் தந்தமைக்கு தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறிய சிங்களத் தாய் இவ்வாகன விபத்தின் மூலம் தம் சகோதரத்துவத்தை வெளிப்படுத்தினாள்.

ரியாஸின் சிறிய காயத்துக்கு மருந்து கட்டியதுடன் எல்லோரையும் கை முகம் கழுவச் சொல்லிவிட்டு சாப்பாட்டுக்கு ஒழுங்கு செய்தார்கள் அந்த வீட்டார்கள்.

அப்பொழுது வாகனத்தைச் சரி செய்துகொண்டு வாகன சாரதியுடன் தம் முழு உடற்பலத்தையும் கொண்டு உதவி செய்த சிங்கள இளம் சகோதரர்கள் வந்து விபத்துக்குள்ளான குடும்பத்தினருக்கு நல்லாறுதல்கள் கூறினர்.

உணவு பரிமாறல் முடிகிறது.

"நம் நாட்டில் ஒரு வாகன விபத்து நடந்து விட்டால் போதும் அடிதடி, கொலை, கொள்ளை, நடக்கிறது. உங்களைப்போல எல்லா சனங்களும் வாழ்ந்து விட்டால் நம் நாட்டில் பிரச்சினைகளே இருக்காது" என்று நியாஸ் நன்றியைக் கூறிக்கொண்டு குடும்பத்தார் அனைவரையும் வாகனத்தில் ஏறும்படி பணித்தான்.

"நாமும் வாழும் போது நம் பிள்ளைகளையும் பிற நலன்களுக்காக வாழப் பழக்க வேண்டும்" என்று தனது மனைவியைப் பார்த்துக் கூறினான் நியாஸ்.


பிறர் நலம் பேணப் பாடு படுவோம் என்று கங்கணங்கட்டிக்கொண்டு தம் இல்லத்தை நோக்கிப் புறப்பட்ட இவர்கள் தம் இலட்சியப் பணிகளை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் வெற்றிவாகை சூடினர்.

**பிறர் நலத்தால் ஒற்றுமை ஓங்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டால் படித்த பாடம்



ஒரு நாள் மாலை நேரம் றிஸ்ாட் கிரிக்கட் மட்டை பந்துடன் வந்தான். தினமும் விளையாடும் நண்பர்கள் சந்தியில் நின்றனர். எட்டுப் பேர் இருந்தார்கள். நான்கு பேரென இரு அணிகளாகப் பிரித்தனர். மற்றைய அணியில் அஸ்லம் அங்கம் வகித்தான்.

முதலில் விளையாட றிஸாட் அணியினர் மட்டையுடன் நின்றனர். அஸ்லம் அணியினர் பந்தை எறிவதற்கு ஆயத்தமானார்கள். “ஏய் றிஸாட் பந்தை பார்த்து அடி..... வீதியில் பலரும் வருவார்கள். அதுபோல பக்கத்து வீட்டுப்பக்கமும் செல்லாது பார்த்திடு”

“நமக்கு மைதானம் வீதியிலேதான். அயலவர்களுக்கும், தெருவில் செல்லும் பலருக்கும் பழக்கப்பட்டு கிடக்கிறது. எவ்வாறாயினும் அயலில் உள்ளவர்கள் எம் மீது கருணை மிக்கவர்கள். சும்மா ஏசுவது மட்டும்தான். துரத்தி விட மாட்டார்கள். எதற்கும் பார்த்து விளையாடுவோம்”

இவ்வாறு அஸ்லம் கூறியதும் விக்கட்டை நோக்கிய படி வேகமாக வீசப்பட்ட பந்தை மிகவும் நிதானமாக தடுத்து ஆடினார்கள்



இக்பால் அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிஸாட் அணியினர்.

இரண்டாவது ஓவர் பந்து வீச்சின் போது அடித்த பந்து சற்று தொலைவில் வந்து கொண்டிருந்த சிறு பையனின் மூக்குக் கண்ணாடியில் பட்டது. அதனை அவதானித்தான் அஸ்லம்.

கண்ணாடி வெண்நிற தோற்றமிக்க அழகிய பிஞ்சு முகத்திலிருந்து கீழே விழுகின்றது. அந்தக் காட்சியைப் பார்த்து திகைத்துப் போனான் அஸ்லம். சிறு பையன் செய்வதறியாது நடுங்கி நின்றான். விளையாடிய அனைவரும் அவனை நோக்கிச் சென்று சூழ்ந்து கொண்டனர்.

"ஐயோ...! என் கண்ணாடி உடைந்து போயிட்டே! என் அப்பா அடிப்பாரே! அம்மா ஏசுவாவே...!" என்று அழுது புலம்பினான் அந்தச் சிறுவன்.

"சின்னத் தம்பி! உமது கண்ணாடியை வாங்கித் தருகிறோம். இப்போது நீங்கள் அழாதீர்கள். உங்கள் வீடு வந்து விடயத்தைச் சொல்கிறோம்." என்று அந்தச் சிறுவனின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறினான் அஸ்லம்..

"நானாமாரே..! அம்மா தேடுவார்கள். நான் உடனே போக வேண்டும்"என்று கூறியபடி அம்மா அப்பாவின் பயத்திற்காக விளையாடிய அனைவரையும் அழைத்துச் சென்றான் அந்தச் சிறுவன்.

"மகன் ரமேஸ்! யார் இவர்கள்..? " என்று தன் வீட்டு முற்றத்தில் தம் மகனுடன் இவர்களையும் கண்டதும் அந்தச் சிறுவனின் தாய் மிகவும் கனிவான தொனியிலே கேட்டாள்.

"அம்மா....! நான் வரும் வழியில் இவர்கள்.. விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களது பந்து பட்டு என் கண்ணாடி உடைந்து விட்டது. அதனை வாங்கித் தருகிறோம் என்று சொன்னார்கள். அதனால் இவர்களைக் கூட்டி வந்திருக்கிறேன்" என்று பயந்த சுபாவத்துடன் கூறினான் சிறுவன் ரமேஸ்.

"ஆஹா! அதற்காகவா...! வந்திருங்கள் பார்ப்போம். இன்னும் கொஞ்ச நேரத்தில் இவர் அப்பா வந்திடுவார். " என்று கூறினாள் ரமேஸின் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புறம் விளையாடிய களைப்பு. இன்னொரு புறம் சிறுவனின் தாய் கண்ணாடிக்காக என்ன சொல்லப் போகிறாள் என்ற பயம். பாதையில் விளையாடியதால் ஏற்பட்ட தண்டனைதானே என எல்லோருடைய மனமும் குறுகுறுத்துக் கொண்டிருந்தன.

கொஞ்ச நேரத்தில் தேனீர் சரி செய்துகொண்டு வந்து கொடுத்த அந்தச் சிறுவனின் தாய் அவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறினாள்.

"பிள்ளைகளே! பாதை என்பது போக்குவரத்துச் செய்வதற்கு.... அது விளையாடும் மைதானம் இல்லை. தெரு விளையாட்டால் பிரச்சினைகள் எத்தனையோ.வாகனத்தில் பந்துகள் பட்டு கண்ணாடிகள் உடைவதும்..( விளையாடுகின்றவர்கள் வந்து வாகனங்களில் முட்டி மோதி உயிர்கள் இழப்பதும்... போன்ற கதைகள் ஆயிரம் உள்ளன. பிள்ளைகளே!. விளையாட்டை சும்மா பராக்காகப் பார்த்து நின்றவர்கள் கூட வாகனத்தில் மோதுண்ட செய்திகள் படிக்கின்றோம்.. இத்தனைக்கும் மத்தியில் தெருவில் விளையாடலாமா?

"நீங்கள் எல்லோரும் நல்ல பிள்ளைகள். இந்த மாதிரி இடங்களில் விளையாடாதீர்கள். போக்குவரத்துக்கு இடைஞ்சல்கள் செய்து கெட்டபெயர் எடுக்காதீர்கள். விளையாட இடங்கள் இல்லை என்றால் வீட்டிலே சும்மா இருங்கள். நல்ல புத்தகங்கள் வாசியுங்கள்" என்றாள் சிறுவனின் தாய்.

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் சிறுவனின் தந்தை வேலை விட்டு வீடு வந்தான். தாய் நடந்த சம்பவங்களைக் கூறி அமர்ந்து கொண்டிருப்பவர்களைப் பார்த்து அறிமுகம் செய்து வைத்தாள்.

"தம்பி மாரே! என்டைய மகன் சுட்டிச் சரி. ஒன்றும் நடக்க வில்லை... ஆனால்.. இந்தச் சம்பவங்களால் பெரும் குழப்பமே வரும். உங்களுடைய வயதில் விளையாடத்தான் வேண்டும்.. அதற்கு மைதானம் உள்ளது..." என்று மிகுந்த அன்புடன் ஆலோசனையாகக் கூறினான் சிறுவனின் தந்தை.

"ஐயா! நாங்கள் செய்தது பெரும் தவறு. அதனாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு பரிகாரம் தேடி உங்கள் வீடு வந்திருக்கிறோம். அந்தக் கண்ணாடியை நாங்களே சரி செய்து தருகிறோம். ஆனால் இப்போதைக்கு எம்மிடம் பணம் இல்லை" என்றான் அஸ்லம்.

"தம்பிமாரே! கண்ணுக்கு கண்ணாடி போடுவது கண்களின் நலன்களுக்காக.. பாதைகள் மக்களின் போக்குவரத்துக்கு... ஆனால் விளையாடுவது எந்தவகையிலும் பொருத்தம் இல்லை." என்றான் சிறுவனின் தந்தை.

றிஸாட் கையில் இருந்த பந்து அவன் அறியாது கை நழுவி கீழே விழுந்து உருண்டு சென்றன. அஸ்லம் அணியைச் சேர்ந்த ஒருவன் அதை இருந்தவாறே கையில் இருந்த மட்டையினால் தட்டிவிட்டான்.

ஒரு சபையில் பந்தை எழுந்து கையால் எடுக்க இயலாது என்றால் இப்பிள்ளைகளிடத்தில் நற்பண்புகளையோ நல்லொழுக்கங்களையே காண்பது எவ்வாறு? இந்தப் பிள்ளைகள்தான் படித்தும் பண்பில்லாது நடப்பவர்கள் என்று அந்நிகழ்வை அவதானித்து சிந்தித்தார் சிறுவனின் தந்தை.

சில பிள்ளைகளுக்கு பள்ளி விடுமுறை வந்தாற் போதும் தெருக்களில் பந்தும் மட்டையுமாகத்தான் நிற்கின்றனர். இன்று எல்லோரும் குறைபட்டுக் கொள்வது போல இளைய தலைமுறைகளிடத்தில் வாசிப்புப் பழக்கமே இல்லை. இந்த ரி.வியும், கிரிக்கட் சனியன் வந்ததாலே இனிமேல் மொழிகளை கடவுள்தான் காக்க வேண்டும் என்ற யோசனைகளும் அவனுக்கு எழுந்தன.

சிறுவனின் தந்தை ஆழ்ந்த சிந்தனையுடன் இருந்த போது சிறுவனின் தாய் உரையாடினாள்.

"பிள்ளைகளே! நீங்களும் எனது சொந்தப் பிள்ளைகள் மாதிரி. கண்ணாடி வாங்க பெரும் செலவு வரும். பணம் எவ்வாறு பெறுவீர்கள்.?" என்று கேட்டாள் சிறுவனின் தாய்.

"பாதையில் விளையாடாதே என்று உம்மா தினமும் திட்டுவாள். நாங்களும் அதைக் கேட்பதில்லை. உம்மாமார்களின் நகைகளை ஈடுவைத்துத்தான் பணம் திரட்ட வேண்டும். பெரியோர்களின் சொல்லைக் கேட்காத குற்றத்திற்கான தண்டனைதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது" என்று தவறை உணர்ந்து கூறினான் றிஸாட்.

தவறை உணர்ந்து கூறும் வார்த்தைகளைக் கேட்டு அந்தத் தாய் மனமகிழ்ந்தாள்.

"பிள்ளைகளே! இன்று நூறு ருபா பணம் சம்பாதிப்பது கடினமான காரியம். உங்கள் பெற்றோருக்கு கஷ்டம் இழைக்கலாமா? " என்றார் அந்தச் சிறுவனின் தந்தை.

"ஐயா! எங்களது ஒவ்வொரு குடும்ப நிலையும் ரொம்பக் கஷ்டம். ஆனாலும் எவ்வழியில் சரி பணத்தை சேர்த்துத் தருகிறோம்" என்று அஸ்லம் கூற மற்றைய ஏழு பேரும் இனி நாங்கள் பாதைகளில் விளையாட மாட்டோம். "என்று கூறி ஏகமானதாகத் தலை அசைத்தார்கள்.

இவர்களின் கதைகளுக்குள் இன்னும் வேறு கதைகள் உள்ளன. பாவம் இவர்கள் என்று சிறுவனின் தந்தை இவர்களின் கதைகளைக் கேட்டு மனம் வருந்தினான். அருகில் நின்றிருந்த சிறுவனின் தாய் தன் கணவனின் காதுக்குள் ஏதோ குசு குசுத்தாள்

சிறுவனின் தந்தை "நீங்கள் எவரும் உடைந்த கண்ணாடிக்காக பணம் தரத் தேவையில்லை. வேண்டும் என்று செய்ய வில்லையே. அதை நாங்கள் செய்து கொள்கிறோம்." என்றான்.

அப்போது அவர்கள் அனைவரும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தனர். வரண்டு காணப்பட்ட எல்லோருடைய முகத்திலும் சிரிப்பைக் காணக் கூடியதாக இருந்தது. மன்னிப்பினைக் கேட்டுக் கொண்டு விடைபெற்றனர். அதன் பின்னர் அஸ்லம், றிஸாட் உட்பட அனைவரும் தம் அருகே உள்ள மைதானத்திற்குச் சென்று இன்பமாக விளையாடினர்.


வி... யாட்டாயினும் சீர்மை கொள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பாளி கியான்



ஒரு மீனவன் அம்பாரை கரையோரப்பகுதியிலே வாழ்ந்து வந்தான். அவனுக்கு தியாகத்திற்கு மத்தியிலே பெற்றெடுத்த ஒரு புதல்வன் இருந்தான். ஒரே மகனான கியான் தம் தந்தையை விட நல்ல கம்பீரமான உடற் கட்டு மிக்கவனாக விளங்கினான். "சக்கரைக்கட்டை:" என்றே அவனை மீனவர்கள் அதிகமானோர் அழைததனர்.

ஒரே தவப் புதல்வனான கியான் கரையேறும் தோணிகளை இழுத்துக் கொடுப்பான். கூலிகளாக மீன்களை வாங்கிக் கொள்வான். அம்மீன்களை விலைக்கு விற்று தினசரி சேமிப்புக்காக சிறிது பணத்தை தந்தையிடம் கொடுத்து விடுவான்.

தந்தை தனது மகனது எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு சின்னச் சின்ன சீட்டுக்களைக் கட்டி பணத்தைத் சேமித்து வந்தான்.

சிறிது காலத்தில அதனால் கியான் பணக்காரன் போல செலவு செய்யத் தொடங்கினான். சிறுகத் சேர்த்த பணத்தை மகன் ஊதாரித்தனமாகச் செலவு செய்வதை தந்தை கண்டு சொல்லிக் கொள்ள வழியில்லாமல வேதனை அடைந்தார்.

இதைச் சகிக்க முடியாத தந்தை மகன் பகல் சாப்பாட்டுக்கு வரும் தரணம் பார்த்து அவனிடம் பின்வருமாறு மிகக்கடுமையாகக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகனே! உன்னைப் பெற்றவுடன் தாய் இறந்து போய் விட்டாள். ஒரு தாயாகவும் தந்தையாகவும் உன்னைத் தூக்கி வளர்த்து ஆளாக்கியுள்ளேன்.. உன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றி யோசிக்காமல் பணத்தை கண்டபடி ஊதாரித்தனமாக செலவு செய்வதேன் ? " என்று இவ்வாறு கேட்டார்.

மலசலம் கழுவி, நோய் நொம்பலம் பார்த்து வளர்த்த தந்தையைப் பார்த்து அவன் கூறும் பதில் பின்வருமாறு அமைகிறது.

"தந்தையே! நான் சம்பாதித்த பணத்தை நான் எதையும் செய்வேன். அதனை யாரும் கேட்க முடியாது. ஆகவே எனது தனிப்பட்ட சுதந்திரங்களில் தலையிடாதீர்கள். பணம் உழைப்பது நினைத்ததை அனுவிப்பதற்கு.."

தந்தை மகனின் பேச்சிலிருந்து அவனது விடயங்களில் இனிமேல் தலையீடுவதில்லை என தீர்மானித்து விட்டார். அன்றிரவு....!

"மடமட" என்ற இரைச்சலுடன் கடல் கொந்தளித்து உயர எழுந்த அலைகள் முறிந்து கியான் அமர்ந்திருந்த கடற்கரை மணல் வரை சென்று நனைத்து விட்டது. அவன் நெஞ்சு திடுக்கிட்டு எழும்பினான்.

சிறு தூரம் சென்று கடற்பக்கம் பார்த்தான். எதிரில் இன்னுமொரு கடல் அலை கொந்தளித்து உயர்ந்து வருவது தென்பட்டது. அந்த அலை அவன் நிற்கின்ற இடம் வரை வந்தது.

இன்னும் சற்று தூரம் சென்று பார்த்தான் இன்றைக்கு வழமைபோல கடற்க்ரை மணலிலே தூங்க முடியாது .........!

மெதுவாக தந்தையை எழுப்பி வீட்டில் தூங்குவதே சிறந்தது. காலையில் எழுந்து கடற்தொழிலை பார்க்கலாம் என்று சென்றான்.

அவன் வீட்டில் தூங்குவது புதுப் பழக்கமாகும். தலையணையில் தலையை வைத்தாலும் தூக்கமில்லை. மனதில் எங்கும் பல சிந்தனைக் குழப்பங்கள் நிறைந்து கிடந்தன. சாட்டுக்காக போர்வையை போர்த்திய வாறு கண்ணை மூடித் தூங்கிக்கொண்டிருந்த போது.....

"என் அருமைத் தந்தையே! என்னை அறியாமல் சில கடுமையான வார்த்தைகளை கதைத்துவிட்டேன்... என்னை மன்னித்துக் கொள்வீர்களோ ....." என்று அவன் உள்ளத்தின் குமுறல் உள்ளத்துக்குள் ஒலித்தது.

"நான்! உங்கள் முன்னால் கதைப்பதற்கு இருக்கவில்லை. கடந்தகால நினைவுகள்தான் என்னைக் கதைக்க வைத்தது. எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் கஷ்டப்பட்டு சேர்த்துவைத்த சொத்து! அந்த தோணில்வலையை! ஒரு நொடிப் பொழுதில் தீ மூட்டி எரித்து விட்டார்களே! அந்தப் பாவிகள்! அவர்களுக்கு நாங்கள் என்ன அநீதி இழைத்தோம். சேர்த்து வைத்த பணத்துக்கு என்ன உத்தரவாதம்... நான் சின்னஞ் சிறிய வயதில் கண்ணால் கண்ட காட்சியை எப்படி மறப்பேன். தந்தையே! என்றது அவனது உள் மனதின் குரல்.

அவனுக்கு தண்ணீர் தாகம் ஏற்பட எழுந்து சென்று குடத்திலிருந்த நீரை எடுத்துப் பருகினான். அப்போது கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் நள்ளிரவு பன்னிரண்டு மணியைத் தாண்டி நகர்ந்து கொண்டிருந்தது. எரிந்த மின் குமிழை அணைக்கின்ற போது தந்தையின் குறட்டைச் சப்தம் பெரிதாகக் கேட்டது.

அருகே சென்று பார்த்தான். போர்த்திருந்த போர்வை அவரைவிட்டும் வெளியே கிடந்தது. அதைப் போர்த்திவிட்டு மீண்டும் கட்டிலுக்குச் செல்கிறான்.

"எரிக்காதே! என் தோணி வலையை எரிக்காதே! என்று தந்தை கெஞ்சிக் கதறி அழுத குரல் இப்போதும் கேட்கிறது. டேய்! நீ உழைத்த பணமா உழையாத பணமா.. நான்! கஷ்டப்பட்டு உழைத்த பொருளுக்கு தீயை மூட்டாதடா! பாவி! என்று அத்தீயவரைப் பார்த்து தந்தை அழுது புலம்புகின்ற சப்தம் அவன் மனதில் ஓங்கி ஒலித்தது.

அன்று இரவு முழுதும் வலது இடது புறமாகவும் குப்புறவும் உருண்டவாறு கண்ணை மூடிக் கொண்டே கதைத்தான். அதிகாலை நேரத்தில்......!

கடல் இரைச்சல் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து தந்தையார் எழும்பி வெளிச்சத்தைப் போட்டு நேரத்தைப் பார்த்தார். அடுப்பில் சுடுநீரைக் கொதிக்க வைத்து தேனீர் ஊற்றி வந்து மகனை எழுப்பினார்.

"மகன் கியான்! எழுந்திரு! தேனீரைக் குடி! கடல் மிக உரமாக இரைகிறது. வேலைக்கு பார்த்து போ" என்று கூறினார் தந்தை.

கியான் சட்டென எழுந்து தேனீரைக் குடித்தவுடன் கடற்கரைக்குச் சென்றான். தோணிகள் கரை யேறுவதற்காய் தருணம் பார்த்துக் கொண்டிருந்தன. கடல் உரமான காலங்களில் படகுகள் கரைக்கு வரும் போது சில கவிழ்ந்து பாரிய அனர்த்தங்கள் ஏற்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வசாதாரணம். இந்நிலை ஏற்படக் கூடாது என்று கியான் இறைவனை வேண்டிக் கொண்டான். இச்சமயத்தில் கியானின் உடல் உழைப்பு மிக முக்கியமானதாகத் தென்படும். பணம் கூடுதலாக உழைப்பான்.

ஒரு தோணி கடல் அலையோடு எந்தத் தடங்கலும் இல்லாமல் வந்து சேர்ந்தது. அத்தோணியை மிகவும் மும்ரமாக நின்று இழுத்தான். அதைத் தொடர்ந்து அலை எழும்பிச் செல்லும் வேகத்தோடு மற்றைய தோணிகளும் கரையைத் தட்டின. ஒவ்வொரு ஆட்களுடைய தோணிகளிலும் கியானின் பலம் பிரயோகிக்கப்பட்டன. அன்று கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டு தந்தையிடம் கொடுக்கச் சென்றான்.

தந்தையார் தோணிவலை பத்தினத்தோடு மனம் உடைந்து மீன் பிடித் தொழிலிலிருந்து ஒதுங்கி வீட்டோடு இருந்து விட்டார்.

தாய் நாட்டு இனவெறியர்கள் அரங்கேற்றிய தடங்கள் இன்னும் மாறவில்லை. மறக்க நினைத்தால் மறக்கவும் முடியவில்லை. சம்பவங்களோடு சம்பவங்கள் கடல் அலையோடு ஓயாமல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தக் கடல் ஒரு நாளைக்கு பொங்கி எழுந்து அத்தீயவர்களை அழித்து விட்டதாம் என்ற செய்தி எப்போது பிறக்கிறதோ அப்போதுதான் எனக்கும் என் தந்தைக்கும் உள்ள கருத்து வேறுபாடுகள் தீரும். தந்தை சொல்வது போல பணத்தினைச் சேமித்துப் பாதுகாக்க முடியும் என்பதைப் பற்றி தந்தையிடம் விளக்கிக் கூற அவனின் மனக்குரல் நினைத்தது.

ச்சி இப்போது தேவையில்லை. வீண் பிரச்சினை எதற்கு. பழையதை நினைத்து என்ன பிரயோசனம். பணம் கையில் கொடுக்கின்ற போது தந்தை தம்மை மன்னித்தால் போதுமென்று கருதினான்.

"தந்தையே இந்தாருங்கள்... பணம். அன்று நடந்த சம்பவங்களை மனதில் வைத்துக் கொள்ளாமல் மறந்து விடுங்கள். அதற்காக மன்னிப்புப் கேட்கிறேன். என்று கூறி விட்டு கடற்கரைப் பக்கம் போக ஆயத்தமானான்".

"மகனே! நான் மன்னிப்பதற்கு நீ என்னப்பா தவறு செய்தாய்! நீ என்ன உனர் உலகம் தெரியாத பிள்ளையா உண்மையைத் தானே கூறினாய்! சரி சமைத்து வைத்திருக்கேன் வந்து சாப்பிடு" என்றார் தந்தை.


கடந்த கால நினைவுகளை மறந்து தந்தை சொற்படி நடந்தான் கியான்.

**கூட்ட புன் தடத்தை மறு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலில் புல்பிடுங்கும் பெண்டுகள்



வண்டிக்காரப் பாருக் என்பவன் மாரிப் போகத்திலே கூடுதலான நெற் செய்கை செய்வான். அவன் விவசாயத் தொழிலிலே நீண்ட நாட்கள் அனுபமுடையவன். அவனுக்கு ஒரு வண்டி மாடும் இருந்தன.

அவன் அந்த வண்டிமாட்டின் துணையின்றி வயல்களுக்குச் செல்ல மட்டான். ஒரு நாள் அதிகாலையில் வண்டிமாட்டுடன் வயலுக்குப் புறப்பட்டான். அவன் செல்லும் பாதையில் அநேகமான விவசாயிகள் துவிச்சக்கர வண்டியிலேயே பயணங்கள் செய்தனர். துவிசச்க்கர வண்டி பழுதுபட்டதால் வாகனம் ஏதாவது ஒன்றில் ஏற்றிச் செல்வதற்காக காத்து நின்றான் ஒரு விவசாயி.

"வண்டியை நிறுத்துங்கள்.! துவிச்சக்கர வண்டியின் மிதிகட்டை உடைந்து விட்டது. இதையும் கொஞ்சம் ஏற்றிக் கொள்ளுங்கள். மிக்க உதவியாக இருக்கும்" என்று வண்டியை நிறுத்தியவாறு கூறினான் அந்த விவசாயி.

"இன்றைய நாள்! புற்கள் பிடுங்கும் நாள்! வட்டைக்கு பெண்டுகள் தத்தி வந்திருப்பார்கள். அவசரமாக ஏற்றிக் கொள்ளுங்கள்" என்று பதில் உரைத்தான் வண்டிக்காரன் பாருக்.

"அடடே அப்படியா? நான் கூடப் புல்லுப் பிடுங்கத்தான் போகிறேன்.... எனக்கு இந்தக் கதி வந்து விட்டது. அவசரமாகவே போவோம்" என்றான் அந்த விவசாயி.

வண்டிக்காரன் பாருக் மாட்டின் மூக்கணாங்கயிற்றை இழுத்து அசைத்தான். மெதுவாகச் சென்ற மாட்டுப் புணையல் கழுத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொங்குகின்ற சலங்கைச் சப்தத்துடன் ஓட்டம் பிடித்தன.

"வண்டிக்காரன்! இப்போது வட்டைக்கு புல்பிடுங்கவோ வேளாண்மை வெட்டவோ ஆட்கள் பிடிப்பது மிகக் கஷ்டம். கூலி ஆட்களைக் கெஞ்ச வேண்டி இருக்கிறது. எல்லாப் பிள்ளைகளும் படிப்பு படிப்பு என்று திரிவதாலே கூலியாட்களின் வெற்றிடங்கள் காலியாகவே உள்ளன" என்றான் அந்த விவசாயி.

வாண்டிக்காரன் பாருக் கூட "ம்...! நிஜம்தான்" என்று அதற்குத் தலை அசைத்தவாறு "இந்த... மடி" என்று வண்டியைச் செலுத்தினான்.

அந்த விவசாயி தனது வயலுக்கு இருபது பெண்டுகளை வரச் சொல்லி இருந்தேன். எத்தனை பேர் வருவார்களோ என்று யோசித்தான். ஆட்கள் குறைவாக வந்து விட்டால் ஒரு வாரத்திற்குப் பிடுங்க வேண்டிய புல்லை நாட்கணக்காக பிடுங்க வேண்டும் என்ற யோசனை வண்டிக்காரனுக்கு இருந்தது.

"எவ்வாறு சரி ! உரிய காலத்திற்குள் உரிய களைகளை அகற்றா விட்டால் வேளாண்மைகளுக்கு நோய்கள் தொற்றிவிடும் "என்று மனந்திறந்து கூறினான் வண்டிக்காரன் பாருக்.

நமது பிள்ளைகள் வெறும் ஏட்டுப் படிப்பை மட்டும்தான் படிப்பாங்க... உடம்பை வருத்தி தம் வேலைகளைக் கூடச் செய்யமாட்டார்கள். படித்தோம்... ஆனால் வேலை இல்லை என்று சும்மாதான் இருப்பார்கள். வெள்ளைக்கார நாட்டிலே எல்லோரும் எல்லா வேலைகளும் செய்வார்களாம். சுறுசுறுப்பாக இயங்குவார்களாம். அதனாலேயே அந்நாட்டவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டில் வாழ்க்கைச் செலவும்... கூலியாட்கள் பற்றாக்குறையும்... பொருட்களின் விலையேற்றமும்.. கூடிக் கொண்டிருக்கின்றன" என்று கூறினான் அந்த விவசாயி.

என்ன மாட்டின் ஓட்டத்தைக் காணோம் என்று தன் கையில் வைத்திருந்த கேட்டிக் கம்பால் ஓங்கி மாட்டுக்கு இரண்டு அடி அடித்தான். அது விரைவாகச் சென்று விவசாயி களைப்பாறும் தேனீர் கடை முற்றத்தில் நின்றன.

அந்த விவசாயி உடைந்த துவிச்சக்கர வண்டியை கீழே இறக்கி அக்கடையில் மூலையில் சாத்திவைத்துவிட்டு வயலுக்குச் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டிக்காரனும் தம் வயலுக்கு வண்டியை நேராக நகர்த்தினான்.

வண்டிக்காரன் மாடுகள் இரண்டினையும் அவிழ்த்து வெட்ட வெளியில் புல் மேய விட்டவன் தம் வயல் வரம்பிற்குள் வந்த கொண்டிருந்த பெண்டுகளிடம் கதைத்தான்.

“குழந்தம்மா! வெயில் உச்சியில் ஏறுமுன்னர் உள்ள வரவைகளை முடித்து விடுவோம். முதலில் நான் வரவைகளைக் காட்டுகிறேன்.

“இந்த வரவைகளுக்குள் அட்டை அதிகம் கிடக்கிறது. வேலையை செய்யும் போது கால்களை அடிக்கடி பார்த்துக் கொள்ளுங்கள்” என்றான் வண்டிக்காரன் பாருக்.

“எங்களுக்கு எந்த நாளும் அட்டைகள்தான் கடிக்கின்றன. இரத்தத்தைக் கொடுத்து பழக்கப்பட்டு விட்டோம். அது மாத்திமல்ல. தண்ணீர்ப் பாம்புகள் கூடக் கடிக்கின்றன. தொழில் என்னும் போது எது வந்தாலும் தாங்கிக் கொள்ளத்தானே வேண்டும்” என்றாள் அந்த தத்திக்காரத் தலைவி குழந்தம்மா.

இவ்வாறு பேசிக் கொண்டு வேலைகள் நடக்கின்றன. சிறிது நேரத்தில் துவிச்சக்கர வண்டி உடைந்த அந்த விவசாயி வண்டிக்காரனைத் தேடி வந்தான். புல் பிடுங்கிக் கொண்டிருந்த தத்திகாரப் பெண்களை ஏற்கெனவே அவன் அழைத்திருந்தான். அங்கு அவர்களைக் கண்டதும் அவனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தன. அவன் வரும் வேளையில் வண்டிக்காரன் உதவி நல்கிய முகத்திற்காக மிகப் பொறுமையுடன் நடந்து கொண்டான்.

“நான்! வயலுக்கு இந்தப் பெண்டுகளைத்தான் கூப்பிட்டேன்! இவர்களை நம்பித்தான் இன்று வயலுக்கும் வந்தேன். சரி! இந்தத் திகதியில் இயலாது என்று சொல்லலாம் தானே...! நான் மாற்று வழிகள் செய்திருப்பேன் ”என்று வண்டிக்காரனைப் பார்த்துக் கூறினான் அந்த விவசாயி.

தத்திக்காரப் பெண்டுகள் அவன் கூறியதைக் கேட்டும் கேட்காமலும் தம் பாட்டுக்கு வயலிலுள்ள களைகளை அகற்றினர். வண்டிக்காரன் பேசாமல் சும்மா கேட்டு நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த தத்திக்காரத் தலைவி குழந்தம்மா வண்டிக்காரனிடம் அந்த விவசாயி கூறின கருத்திற்கு நியாயம் பேசினாள்.

"வண்டிக்காரனே! நாங்கள் வயிற்றுக்காக தொழில் புரிபவர்கள். இங்கே நிற்பவர்கள் எல்லாரும் குமருப் பிள்ளைகள். சீதனக் கொடுமையால் திருமணம் என்பது இவர்களுக்கு வேள்விக்குறி? நாங்கள் எங்கே கூலி நியாயமாக் கிடைக்கிறதோ அங்கே முதலில் செல்வோம். கூலியில் ஆற்றாச் சோலி பிரட்டி மோசடி செய்வோரிடம் நாங்கள் தாமதித்துத்தான் போகிறோம். எங்களது உழைப்புக்கு நியாயமான கூலிகள் இல்லை. கூலிகள் சரியாகக் கிடைத்தால் இன்னும் எத்தனையோபேர் வருவார்கள். இவருக்குக் கூட ஒரு பெண்டுகள் தத்தியை அனுப்பி இருப்பேன். எங்கள் வயிற்றில் அடிக்கும் போடிமார், முதலாளிகளுக்கு ஒரு பாடம் புகட்டத்தான் நாங்கள் போக வில்லை" என்றாள் அந்தத் தத்திகாரத் தலைவி குழந்தம்மா.

குழந்தம்மாவின் பேச்சிற்கு வாய் மூடி நின்றான் அந்த விவசாயி. "இந்த முதலாளிமார்கள், போடிகள் ஏழைகளின் வயிற்றிலேதான் அடிக்கிறார்கள். நேர்மை, நியாயம் என்பது இங்கு யாரிடமும் இல்லை. எம்மையும் பாதுக்காத்துக் கொண்டு கூலியாட்களையும் பார்க்க வேண்டியது நமது கடமை. கூலியை ஒழுங்காகப் பேசி வேலையை நாளைக்கே ஆரம்பித்துக் கொள்ளுங்கள்" என்றான் வண்டிகாக்காரன்.

மறுநாள் அந்த விவசாயினுடைய வயலுக்குள் பெண்டுகள் வந்து புற்கள் பிடுங்கினர்.

**கூலியை சுரண்டிவிடின் அழிவது பயிர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

இனவாத சிந்தனைகள் சிறுவர்களின் மூளையில் பதிந்து காணப்படுகின்ற வேளையில் மனிதாபிமான எண்ணக்கருத்துக்களை நெஞ்சி நிமிர்த்தி சொல்வதில் இக்பால் அலியின் சிறுவர் கதைகள் உணர்த்தக் கூடியதாக உள்ளன. இக்கதைகளை சிறுவர் காலம் பூராக அறிந்து மனித நேயம் பற்றிய தத்துவார்த்தக் கருத்துக்களைக் மேலும் ஆழமாக அறிந்துக் கொள்வதற்கு இவரின் கதை வார்ப்பு வழித்துணையாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

சிறுவர் கதை என்று பேய் பிசாசுகளையும் மாயாஜாலங்களையும் எழுத்தாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்ற வகையில் காலத்தையும் நேரத்தையும் வீணாக்குகின்ற ஏராளமான சிறுவர் நூல்கள் வெளிவருகின்றன. ஆனால் இதைவிடுத்து குழந்தைகளுக்கு வீரத்தையும் அறிவையும் தூண்டக் கூடிய கதைகள் சொல்லப்பட வேண்டும் என்று பிளேட்டோ தனது குடியரசு என்ற நூலில் முன்வைக்கும் கருத்தும் தற்கால சூழலில் கவனம் செலுத்தப்பட வேண்டிய தொன்றாகும். இதையே இக்பால் அலி தம் கதைகளில் நகர்த்திச் செல்கின்றார். இவரது சிறுவர் கதை நூல் தாம் வாழுகின்ற மண்ணினது மனிதாபிமானமற்ற போக்கினையும் மக்களினது உண்மையான முகங்களையும் காட்ட முற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஒவ்வொரு சிறுவர் கதைகளையும் படிக்கின்றபோது நேரில் கண்டு அனுபவித்த சம்பவங்கள் சிறுவர் உலகோடு உறவு கொண்டிருக்கின்ற உணர்வு ஏற்படுகின்றது. நிச்சயமற்ற தன்மையில் மனித சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கையில் வருங்காலத்தில் நமது நாட்டினுடைய சிறார்களின் வாழ்வு கேள்விக்குறியாகப் போகும் என்ற பீதி நிலை இல்லாமல் மனித நேயமுள்ள நல்லதொரு சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை இக்பால் அலியின் எழுத்து வலுப்படுத்த முனைகிறது.

இவர் எதிலும் புதுமையை விரும்புகின்றவர். இதற்கு முட்டுக்கட்டை போடும் எழுத்தாளர்களை விஞ்சி இலக்கியத்தை நிலைநிறுத்தி வருகின்றார். அவருடைய இரு சிறுவர் பாடல் நூல்கள் நல்ல வரவேற்பினை சிறுவர் மத்தியில் பெற்றுள்ளது. இச்சிறுவர் கதை நூல் கூட பல வித்தியாசமான பார்வைப் புலன்களைக் காட்டிக்கொண்டு சிறுவர்களுடைய இதயத்தை ஈர்த்து விடுகின்ற நிகழ்தளங்கள் உள்ளன.

இக்கதை மாணவர்கள் நன்கு பயன்படும் வகையில் எளிய நடையில் எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் சிறார்களின் மத்தியில் நல்ல சிந்தனைத் தெளிவினை ஏற்படுத்தும் என்பது யாராலும் மறுக்க முடியாது. எனவே, கவிஞர் இக்பால் அலி சிறார்களின் அறிவு மேம்பாட்டிற்கு மேலும் மனித நேயத்தைக் விதைக்கக் கூடிய நூல்களைத் தர வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

ஏ.ஜே.எம். முபாறக்
பிரதம கணக்காளர்
வரி, வியாபார ஆலோசகர்
பண்டாரநாயக்க மாவத்த, கண்டி.

ISBN 955-8335-02-9

PrintEx, Kandy. 08-2228664

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org